பின்னால் தான் ஒரு முடிவு எடுப்பார்கள். மத்திய சர்க்கார் கூட இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை கம்பல்சரியாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திலே இரண்டு மூன்று ஆண்டுகளாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி மேலிடத்திலே உள்ளவர்கள் கூட இது அவசியம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தும், விவசாயிகள் மாட்டு அக்கறை காட்டுகிறோம் என்று சொல்லிக்கொள்கின்ற அரசாங்கம் இந்தத் திட்டத்தை இவ்வளவு காலதாமதமாக, நிறைவேற்றாமல் வைத்துக் கொண்டிருப்பானேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் மத்திய அரசாங்கத்திலே பார்லிமெண்டை சேர்ந்தது 26-ம் தேதி ஜூலை மாதம் 1966-ல் டெப்டி மினிஸ்டர் திரு. மிஸ்ரா அவர்கள் கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கம்பல்சரியாகக் கொண்டுவர வேண்டுமென்று பார்லிமெண்டிலே அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் ஒத்துக்கொண்ட பிறகு நாமும் அதைப் பற்றி முடிவுசெய்து கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் சம்பந்தமாகப் பரிசீலனை செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசீலனை எங்கே செய்கிறார்கள். இங்கே செய்கிறார்களா அல்லது வெளிநாடுகளுக்குப் போய் பரிசீலனை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கம்பு, கேழ்வரகு இவைபற்றிதான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் இங்கே ஆரம்பித்த பிறகு மத்திய சர்க்காரும் ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, அவர்கள் முடிவுசெய்த பிறகு நாமும் முடிவு செய்யலாம்.

Agricultural College at Thanjavur

* 400 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal under consideration for the starting of an Agricultural College in Thanjavur district during the Fourth Five Year Plan period, in view of the progress of the intensive cultivation schemes that are being implemented there?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தலைவரவர்களே, தஞ்சை ஜில்லாவிலே 14 லட்சம் ஏக்கர் நஞ்சை விவசாயம் செய்கின்ற இடங்களில், அநேக திட்டங்கள் மூலம் உற்பத்தியைப் பெருக்கு

4th November 1966]

வதற்காக அமெரிக்க அரசாங்கத்திலே இருந்துகூட ஆராய்ச்சி செய்யப்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு கல்லூரி வைத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது இந்த மாநிலத்தில் மூன்று விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. இரண்டு அரசாங்கத்தின் சார்பில் இயங்குகின்றன. ஒன்று தனியார் ஸ்தாபனத்தின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. தஞ்சை நெற்களஞ்சியம் என்பதால் அதைப் பாராட்டுகிறோம். நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்த ஜில்லாவிலே ஒரு கல்லூரி ஏற்படுத்துவதைப்பற்றி பரிசீலனை செய்யலாம். வந்தாலும் வரலாம் என்றுதான் சொல்கிறேன், வாக்குறுதி சொல்ல முடியாது. உற்பத்தி அதிகமாகச் செய்கின்ற காரணத்தால் தஞ்சையைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. இராம. அரங்கண்ணல் : தஞ்சை மாவட்டத்தில் இப்படி ஒரு விவசாயக் கல்லூரி நிறுவுவதற்கான நிலம், இடம் முதலியவற்றை எல்லாம் மன்னார்குடிக்கு அருகில் தருவதாக ஒரு பார்லிமெண்ட் உறுப்பினர் அமைச்சர் அவர்களிடம் கூறியதாக நான் அறிகிறேன். திருவாரூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியை அந்தக் கல்லூரிக்குத் தருவதாக சொல்கிறார்கள். ஆகவே, தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடியில் ஒன்றும், திருவாரூரில் ஒன்றும் ஆக இரண்டு இடங்களில் ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பார்லிமெண்ட் அங்கத்தினரும், சட்டசபை அங்கத்தினரும் பேசியிருப்பார்கள் போல் இருக்கிறது. என்னிடம் அந்த விவரம் இல்லை.

கிராம மருந்தகங்கள்

*416 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களின் கீழ் நடைபெற்றுவரும் ரூரல் டிஸ்பென்ஸரீ டாக்டர்களின் பணி முறை, ஒன்றிப்பு மன்ற ஆணையாளர்களால் எவ்விதம் மேற்பார்வையிடப்படுகிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The Rural Medical Practitioners are under the administrative control of the Commissioners of Panchayat Unions. They are also subject to the technical control of the concerned District Medical Officer and the Director of Medical Services in so far as the professional side of the work is concerned.